**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 245/2023 P.W. 4 /L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அறிவழகன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. சிதம்பரம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 30.10.2023**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலைச்செய்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களைத் தெரியும். என்னிடம் காட்டப்படும் **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பமும் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகும்.** 31.12.2022 ம்தேதி காலை 05.00 மணி அளவில் நானும் என்னுடைய நண்பர் ஜெகதீஸ் என்பவரும் வேலைக்காக மண்டைக்காடு அருகே சென்றுக்கொண்டிருந்த போது அப்போது வெட்டுமடை இசக்கியம்மன் கோவில் முன்பாக போலீசார் வாகன சோதனை செய்துக்கொண்டிருந்தார்கள்.

2. அப்போது பல்சர் கறுப்பு கலர் இருசக்கர வாகனத்தில் ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இருவரும் வந்துக்கொண்டிருந்தார்கள். போலீசார் கை காட்டி நிறுத்தியும் நிறுத்தாமல் திரும்ப ஓட முயன்றவரை போலீசார் ஓடிச் சென்று நிறுத்தி விசாரணைச் செய்த போது அதன் பிறகு போலீசார்விசாரணை செய்ததில் ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இருவரையும் விசாரித்தார்கள். அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். என் முன்னால் கொடுத்தார்கள் அதில் நான் அவர்கள் முன்னிலையில் கையொப்பம் செய்தேன்.

3. ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட 2 ம் நபர் கையிலிருந்து 25 பவுன் நகையும், ஆஜர் செய்தார். அதன்பின்பு ஆரல்வாய்மொழியில் உள்ள பைனான்ஸ் கடைக்கு ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் போலீசாருடன் என்னையும் அழைத்துச் சென்றார்கள். அங்கும் சில நகைகளையும் அடையாளம் காட்டி எடுத்துக்கொடுத்தார்கள். அதையும் போலீசார் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார்கள். அத்தாட்சியில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் .**

1. நான் கொத்தனார் வேலைச்செய்து வருகிறேன். எனக்கு விவசாயம் செய்வதற்கு நிலம் எதுவும் இல்லை. நான் வீட்டிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் 04.30 மணிக்கு எழும்பினேன். கிளம்புவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் 04.45 மணிக்கு கிளம்பிவிட்டேன். இரும்பிலி ஜங்சனில் இருந்து எனது வீடு எவ்வளவு தூரம் என்றால் பக்கம் தான். காவல்நிலையம் எவ்வளவு துரம் என்றால் ஒன்றரை கி.மீ தொலைவு உள்ளது. நான் இரும்பிலி ஜங்சனில் இருந்து காவல்நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றேன். மேற்படி இருசக்கர வாகனம் யாருடையது என்றால் எனது நண்பர் ஜெகதீஸ் உடையது. மேற்படி வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்றால் ஜெகதீஸ் தான் ஓட்டி வந்தார்.

2. நான் சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொன்ன இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எத்தனை கி.மீ தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். நாங்கள் எத்தனை மணிக்கு கோவில் அருகே சென்றோம் என்றால் 05.00 மணிக்கு சென்றுவிட்டோம். மேற்படி கோவில் அருகில் நாங்கள் எதற்காக நின்றோம் என்றால் போலீசார் நின்றுக்கொண்டிருந்தார்கள், அதனால் நின்று சென்றோம்.

3. மேற்படி கோவிவில் இருந்து மண்டைக்காடு பகவதியம்மன் கோவில் எத்தனை கி.மீ தொலைவு இருக்கும் என்றால் கால் கி.மீ தொலைவு இருக்கும். போலீசார் என்னை விசாரித்ததால் நாங்கள் மண்டைக்காடு கோவில் தாண்டி செல்லவில்லை. அவ்வாறு நான் மண்டைக்காடு பகவதியம்மன் கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்பி வந்ததாக சொல்லப்பட்டிருந்தால் அது - தவறு. **மேற்படி கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி சாட்சியின் காவல்துறை சமர்ப்பித்த வாக்குமூலத்தை கொடுத்து படிக்க சொல்லி கேட்கிறார். அதில் மேற்படி சங்கதிகளைப் பொறுத்து மேற்படி சாட்சி மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் சரியல்ல என்றும் தான் சொன்னது தான் சரி என்று கூறுகிறார்.**

**4.** எத்தனை போலீசார் சம்பவயிடத்தில் நின்றார்கள் என்றால் 4, 5 போலீசார் நின்றார்கள். அவர்கள் பெயர்கள் தெரியுமா என்றால் யார் பெயரும் தெரியாது. மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் பெயர்கள் யார் எனக்கு சொன்னார்கள் என்றால் போலீசார் தான் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் எந்தபெயரையும் சொல்லவில்லை.

5. போலீசார் என்னிடம் எழுதப்பட்ட தாளில் கையொப்பம் பெற்றார்களா என்றால் - ஆம். என்னிடம் கையால் எழுதப்பட்ட தாளில் தான் கையொப்பம் பெற்றார்கள். அதனை ஜெராக்ஸ் எடுத்தும் அதிலும் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். ஜெராக்ஸ் எடுத்தார்கள். லேப்டாப்பில் அடித்தார்கள். அதையும் ஜெராக்ஸ் எடுத்து கையொப்பம் பெற்றார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்லப்படும் இடத்தில்

ஜெராக்ஸ் கடை எதுவும் திறந்திருந்ததா என்றும் போலீசார் ஜெராக்ஸ் எடுத்தார்களா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. அந்தயிடத்தில் ஜெராக்ஸ் கடை எதுவும் இருந்ததா என்றால் அவர்கள் மண்டைக்காட்டிற்கு போய் எடுத்திருக்கலாம். நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் பிரிண்டர் எதுவும் கொண்டு வந்திருந்தார்களா என்றால் எனக்குத் தெரியாது.

6. நான் சொல்வது போல் எந்த நேரத்திலும் எந்தயிடத்திலும் வைத்து ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்றாலும், ஒரு சமானியனின் புரிதலுக்கு கூட எட்டாத விஷயங்களை அதாவது 05.00 மணிக்கு ஜெரா'க்ஸ் கடை திறந்திருந்ததாகவும் ஜெராக்ஸ் எடுத்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் - சரியல்ல.

7.மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் நேரத்தில் பிரிண்டரையோ அதை பிரிண்ட் எடுத்ததாகவோ நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

8. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்லப்படும் தினத்தன்று நானும் எனது நண்பர் ஜெகதீஸ்ம் எத்தனை தாள்களில் கையொப்பம் செய்தோம் என்றால் கையால் எழுதப்பட்ட பேப்பரில் ஒன்றும் ஜெராக்ஸ் எடுத்த பேப்பரில் ஒன்றும் அதன் பிறகு ஆரல்வாய்மொழியில் கையால் எழுதப்பட்ட பேப்பரில் என மொத்தம் 3 கையொப்பம் செய்தோம். வேறு கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கையொப்பம் செய்யப்பட்டதாக சொல்லியிருந்தால் அது தவறாகும்.

9. எனது நண்பர் அ.சா3 ஜெகதீஸ் காவல்நிலையத்திற்கு பரிச்சயமானவர் என்பதால் அவரின் நண்பர் என்ற முறையில் நானும் அடிக்கடி காவல்நிலையம் செல்வேன் என்றால் - இல்லை. நான் காவல் நிலையம் சென்ற பழக்கம் உண்டா என்றால் - ஆம். கோவில் விஷேசங்களுக்கு எல்லாம் செல்லும் பழக்கம் உண்டு.

10. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் தினத்தன்று நானும் அ.சா3 ஜெகதீஸ்ம் நடந்து சென்றதாக சாட்சியம் எதுவும் சொல்லப்பட்டிருந்தால் அது தவறு. நாங்கள் பைக்கில் தான்சென்றோம். மேற்படி எனது நண்பர் அ.சா3 ஜெகதீஸ் தான் என்னுடன் ஆரல்வாய்மொழிக்கு வரவில்லை என்று சொல்லியிருந்தால் அது - தவறு.

11. காவல்துறையினர் நகையின் அளவீட்டை பொறுத்து கைப்பற்றப்பட்ட இடத்தில் அளவீடு எதுவும் செய்தார்களா என்றால – இல்லை. பின் எவ்வாறு நான் அளவீடு பற்றி சொல்கிறேன் என்றால் போலீசார் பேசிக்கொண்டார்கள். அவர்கள் பேசிக்கொண்டதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

12. அ.சா3 ஜெகதீஸ் தனது சாட்சியத்தில் வேறு எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்று சொல்லியிருந்தால் அது - தவறு. நான் போலீசாருடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவன் என்றாலும் காவல்துறையினரின்

வேண்டுகோளுக்கிணங்க இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் - சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 245/2023 P.W. 3/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜெகதீஸ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 30.10.2023**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி **கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 31.12.2022 ம் தேதி அதிகாலை 04.45 மணியிலிருந்து 05.00 மணி வரை நானும் எனது நண்பர் அறிவழகனும் வேலைக்குச் செல்வதற்காக குளச்சலில் இருந்து மண்டைக்காட்டிற்கு நடந்து சென்றோம். 05.00 மணி அளவில் வெட்டுமடை இசக்கியம்மன் கோவில் அருகே வரும்போது போலீசார் வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தார்கள்.

2. வாகன சோதனை செய்துக்கொண்டிருந்த இடத்திற்கு சென்றபோது மண்டைக்காட்டிலிருந்து குளச்சல் நோக்கி கறுப்பு கலர் பல்சர் இருசக்கர வாகனத்தில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் வந்துக்கொண்டிருந்தார்கள். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் அன்று நான் பார்த்த நபர்கள். அன்றையதினம் மேற்படி இன்று ஆஜராகியுள்ள பெண் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சுடிதார் அணிந்திருந்தார்.

3. போலீசார் கையை காட்டி வண்டியை நிறுத்திய போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் வண்டியை திருப்ப முயன்ற போது போலீசார் ஓடி வந்து வண்டியின் சாவியை எடுத்து விட்டு மேற்கொண்டு அவர்களை விசாரித்த போது ஆண் நபர் தன்னுடைய பெயர் ஷாபுமோன் என்றும்

பெண் தன்னுடைய பெயர் நூர்ஜகான் என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர்களை விசாரித்த போது அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதை என் முன்பாக பதிவுச் செய்தார்கள். அதை என்னிடம் படித்து காண்பித்து அங்கேயே அதில் நான் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் .</u>**

நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொன்ன சங்கதிகளை தவிர்த்து வேறு சங்கதிகள் எதுவும் இல்லை. நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் ஓரளவு தான் படிக்கத் தெரியும். நான் குளச்சல் காவல்நிலையத்திற்கு அடிக்கடி செல்வேன் என்றால் பேன் மாட்ட செல்வேன், ஒயரிங் பண்ண போவேன். நான் டீ வாங்கிக் கொடுப்னேன் என்றால் கொடுக்க மாட்டேன். குளச்சல் காவல்நிலையத்தில் என்னை அடிக்கடி பார்க்கலாம் என்றால் - சரியல்ல. மாதத்தில் ஒருநாள் பார்க்கலாம்.

2. நான் கையொப்பம் போட்டுக் கொடுத்த பேப்பர் எழுதப்பட்ட பேப்பரா அல்லது எழுதபடாத பேப்பரா என்றால் எழுதப்படாத டைப்ரைட்டிங் பேப்பர். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால்- ஆம் தெரியும், அவர்கள் படித்துக் காண்பித்தார்கள். நானும் படித்துப் பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட இடமானது இருட்டான பகுதி என்றால் ஒரு நபரை பார்த்தால் தெரியும் அளவிற்கு உள்ள பகுதி.

3. என்னுடைய வீட்டிலிருந்து குளச்சலுக்கு சுமாராக 1 கி.மீ இருக்கும். குளச்சல் காவல்நிலையத்திலிருந்து என்னுடைய வீடு 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி நான் கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் பொறுத்து அதை யார் யார் பெற்றார்கள் என்றால் ஐயாக்கள் பெயர்கள் எல்லாம் எனக்குத் தெரியாது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் பதிவுச் செய்யும் போது வீடியோ பதிவுச் செய்தார்களா என்றால் இல்லை. போட்டோ எடுத்தார்களா என்றால் அதுவும் இல்லை.

4. ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன் சேர்ந்து என்னையும் காவலர்கள் எங்காவது அழைத்துச் சென்றார்களா என்றால் - சரியல்ல. சம்பவயிடத்தில் போலீசார் கம்பியூட்டர், லேப்டாப், பிரிண்டர் ஆகியவற்றை எல்லாம் அந்த பகுதியில் வைத்து என்னிடம் தட்டச்சு செய்து கையொப்பம் பெற்றார்களா என்றால் - இல்லை. தட்டச்சு செய்து அதனை வெளியே சென்று ஜெராக்ஸ் எடுத்து வந்தார்கள். அதன் பின்பு தான் கையொப்பம் செய்தேன்.

5. நான் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்ததை பொறுத்து அந்தயிடத்தில் நானும் எனது நண்பர் அறிவழகனும் நடந்து வந்ததாக தான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் - சரிதான். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன்

நானும் சென்று போலீசார் முன்னிலையில் நூர்ஜகான் என்பவரிடமிருந்து 25 பவுன் நகைகள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தால் அது - தவறு. அவ்வாறு எதுவும் இல்லை. நான் சொல்வது போல் எந்த சங்கதியும் இல்லை என்றாலும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை காவல்நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அங்கு தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் - சரியல்ல.

6. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி காவல் அதிகாரிகளுக்கு உதவி செய்பவன் என்ற முறையில் பொய்யாக புனையப்பட்ட வழக்கில் உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த நேரத்திலும் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பார்க்கவில்லை என்றாலும், அவர்களை பார்த்ததாக உண்மையை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை குளச்சல் காவல்நிலையத்திலிருந்து அழைத்ததால் சாட்சி சொல்ல வந்தேன். யார் அழைத்தது என்றால் ஞாபகமில்லை. குளச்சல் காவல்நிலைய எல்கையில் ஸ்ரீமன்நாராயண சாமி திருக்கோவில் என்பது இல்லை. அந்த கோவிலுக்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றிருக்கலாம். மேற்படி கோவிலில் வைத்து எந்த கையெழுத்தும் வாங்கப்படவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக நான் கையெழுத்துப் போடவில்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.